# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 43/2020 தேதி- 23.03.2026
(DW.2) – எட்வின்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1.சீமாட்டி என்பவருக்கு எத்தனை பெண் பிள்ளைகள் உண்டு என்றால் நான்கு பெண் பிள்ளைகள் உண்டு. அவர்களுடைய பெயர்கள் தெரியுமா என்றால் இரண்டு பெண் பிள்ளைகளின் பெயர் மட்டும் தெரியும், குளோரி மற்றும் ரெஞ்சிதம் ஆகும். 13.03.2026 அன்று வழக்கறிஞர் அலுவலகத்திற்கு நான் சென்ற போது சாட்சி பட்டியலில் உள்ள சேவியர் என்பவரும் உடன் வந்தார் என்றால் சரிதான். மேற்சொன்ன சேவியர் என்பவரை அன்றைய தேதியில் தான் முதன்முதலாக பார்த்தேன் என்றால் சரிதான். அவர் என்ன வேலை செய்கிறார், அவர் எங்கு உள்ளார் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2.நான் என்ன படித்துள்ளேன் என்றால் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பிறந்த வருடம் 1983 என்பது சரியா, தவறா என்றால் அம்மாவிடம் தான் கேட்க வேண்டும், அம்மா சொன்னால் சரிதான். 1983 ல் நான் பிறந்து இருந்தேன் என்றால் 1998 ல் எனக்கு 15 வயது இருக்கும் என்றால் தெரியாது. எனக்கு 15 வயது தான் நடைபெற்றுக் கொண்டு இருந்தது என்றால் நான் மைனராக தான் கருதப்படுவேன் என்றால் சரியல்ல.

3.1998 ல் நான் எந்த வகுப்பு படித்து வந்தேன் என்று நினைவு உள்ளதா என்றால் நினைவில் இல்லை. 7 வது பிரதிவாதியான ராஜ்குமார் 8 வது பிரதிவாதியான சாந்தாவின் மகன் என்றால் சரிதான். 5 வது பிரதிவாதியான சிங்கிற்கு மேற்சொன்ன 7 வது பிரதிவாதியான ராஜ்குமார் மகன் என்றால் சரிதான். நான் பெயிண்டிங் வேலைக்கு செல்கிறேன் என்றால் சரிதான். 7 வது பிரதிவாதியான ராஜ்குமாரும் பெயிண்டராக வேலைக்கு செல்கிறார் என்றால் சரிதான்.

4.மேற்சொன்ன 7 வது பிரதிவாதியான ராஜ்குமாரும், நானும் ஒன்றாக வேலைக்கு சென்று வருவோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் 4 வது பிரதிவாதியான ராவ் கேன்சரால் பாதிக்கப்பட்டு இறந்து போனார் என்றால் சரிதான்.

அவர் இந்த வழக்கின் 3 வது பிரதிவாதியான ரெஞ்சிதம் நாகர்கோவில் வீட்டில் தான் இறந்தார் என்றால் தெரியாது. எங்கு அடக்கம் செய்யப்பட்டது என்றால் தெரியாது. வழக்கின் 8 வது பிரதிவாதியான சாந்தாவின் வீட்டின் அருகே தான் என்னுடைய வீடு உள்ளது என்றால் சரிதான்.

5.ராவ் இறப்பதற்கு முன்னதாக 8 வது பிரதிவாதியான சாந்தா வீட்டில் இருந்து வெளியேற்றப்பட்டு ரோட்டில் தான் வாழ்ந்து வந்தார் என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. ராவ் எழுதிய செட்டில்மென்ட் ஆவணத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சீமாட்டி இறந்த சமயத்திலும், இறப்பின் போதும், 7 வது நாள் நினைவு நாளிலும் 1வது பிரதிவாதி கலந்து கொள்ளவில்லை என்றால் தெரியாது. அதே போல் சீமாட்டி இறந்த சமயத்திலும், இறப்பின் போதும், 7 வது நாள் நினைவு நாளிலும் 3 வது பிரதிவாதியான ரெஞ்சிதம் கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

6.பொதுவாக இவ்வூரின் முறைப்படி திருமணம் செய்து சென்ற பெண் இறந்துவிட்டால் அவரின் கணவர் ஊரில் வைத்து தான் இறுதி சடங்கு மற்றும் அடக்கம் செய்யப்படும் என்றால் சரிதான். அவ்வாறு இறந்த பெண் பிள்ளைகளின் உடல்களை குடும்ப கல்லறையில் அடக்கம் செய்யமாட்டார்கள் என்றால் சரிதான். 1வது பிரதிவாதியான ரோஸ்மேரி இறந்த பிறகும் அவரின் உடலை அவருடைய கணவரின் ஊரில் தான்அடக்கம் செய்துள்ளார்கள் என்றாலும், குடும்ப கல்லறையில் அடக்கம் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

7. 4 வது பிரதிவாதியான ராவ் நாகர்கோவிலில் இறந்தாலும், அவரை குடும்ப கல்லறையில் தான் அடக்கம் செய்தார்கள் என்றால் சரிதான். சீமாட்டியின் 7 வது நாள் நினைவு நாளில் கலந்து கொள்ளவில்லை என்றாலும், எனக்கு அப்போது 15 வயது தான் நடைபெற்று வந்தது என்றாலும், பெண் பிள்ளைகள் அனைவரும் இறுதி சடங்கில் பங்கேற்று கொண்டார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 7 வது நாள் நினைவு நாளில் வாக்கால் பாகம் ஏதும் நான் சொல்வது

போல் நடைபெறவில்லை என்றால் சரிதான். 7 வது பிரதிவாதியான ராஜ்குமாருடன் நான் வேலைக்கு சென்று வருவதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.